இந்தியத் தூதரகம்
கோலாலம்பூர், மலேசியா

## செய்தி அறிக்கை

## 41, 42, 43 மற்றும் 44வது ‘இந்தியாவை அறிவோம் திட்டம்’ (KIP)

புலம்பெயர்ந்த இந்திய வம்சாவளி இளைஞர்கள், இந்தியாவின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் தற்கால இந்தியாவைப் பற்றி தெரிந்து கொள்ளும் நோக்கில் இந்திய அரசாங்கம், *‘இந்தியாவை அறிவோம் திட்டம்’* எனும் நிகழ்வை சுமார் *25 நாட்களுக்கு* நடத்தவுள்ளது.

| இந்தியாவை அறிவோம் திட்டம் (KIP) | திகதி | இடம் |
|---|---|---|
| 41வது KIP | செப்டம்பர் 3 முதல் 27, 2017 | பஞ்சாப் & ஹரியானா & சண்டிகர் |
| 42வது KIP | அக்டோபர் 1 முதல் 25, 2017 | ஜார்கண்ட் & சத்தீஸ்கர் |
| 43வது KIP | நவம்பர் 1 முதல் 25, 2017 | மேகாலயா & அஸ்ஸாம் |
| 44வது KIP | நவம்பர் 29 முதல் டிசம்பர் 23, 2017 | ஆந்திரப் பிரதேசம் & தெலுங்கானா |

2. புலம்பெயர்ந்த இந்திய வம்சாவளி இளைஞர்களுக்காக நடத்தப்படும் இந்நிகழ்வு, பொருளாதாரம், கல்வி, தொழில்துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு & தொழில் நுட்பத் தகவல் மற்றும் கலாச்சாரம் போன்ற துறைகளில் இந்தியர்கள் அடைந்த முன்னேற்றத்தையும்; அவர்களின் வேறுபட்ட வாழ்க்கை முறையினை பற்றி அறிந்து கொள்ளும் ஒரு விழிப்புணர்வு நிகழ்வாகும். அதுமட்டுமின்றி, இந்தியாவுடன் நெருக்கமான உறவை வளர்க்க, இளம் நிபுணர்கள் அவர்களின் அனுபவங்களையும் எதிர்பார்ப்புகளையும் பகிர்ந்து கொள்ளும் வகையில் ஒரு பிரத்தியேக கருத்தரங்கை புலம்பெயர்ந்த இந்திய வம்சாவளி இளைஞர்களுக்காக இந்நிகழ்வில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3. 18 முதல் 30 வயது வரையுள்ள மலேசிய இந்திய வம்சாவளி இளைஞர்கள் இந்த திட்டத்தில் கலந்து கொள்ளலாம். வெளிநாடு வாழ் இந்தியர்கள் **(Non-Resident Indian citizens)** இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியாது.

4. இத்திட்டத்தைப் பற்றிய விரிவான உள்ளடக்கம் பின்வருமாறு :

I) இந்திய அரசியல் செயல்முறை மற்றும் பல்வேறு துறைகளின் முன்னேற்றங்கள் பற்றிய விளக்கக்காட்சிகள்.

II) புகழ்பெற்ற பல்கலைக்கழகம், கல்லூரி, பயிலகம், ஆசிரியர் மற்றும் மாணவர்கள் உடனான கலந்துரையாடல்.

III) தொழில்துறை வளர்ச்சிக்கான விளக்கக்காட்சி மற்றும் சில கைத்தொழில் நிறுவனங்கள்/ தொழிற்சாலைகளைப் பார்வையிடல்.

IV) பாமர மக்களின் வாழ்க்கை முறையினைப் புரிந்து கொள்ள, தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்திற்குச் சென்று பார்வையிடுதல்.

V) இந்திய ஊடகங்களுடனான வெளிப்பாடு.

VI) பெண்கள் விவகாரத்தைக் கையாளும் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் கலந்துரையாடல்.

VII) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த / நினைவுச்சின்னம் கொண்ட இடங்களுக்குச் சென்று பார்வையிடுதல்.

VIII) கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்.

IX) உயர் பிரமுகர்களான இந்திய ஜனாதிபதி, இந்திய தலைமை தேர்தல் ஆணையர், தணிக்கையாளர் மற்றும் இந்திய ஜெனரல் ஆடிட்டர், வெளிநாட்டு இந்திய விவாகாரத்துறை அமைச்சர், இளைஞர் விவாகார மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் மற்றும் இதர பிரமுகர்களுடனான சந்திப்பு.

5. இத்திட்டத்திற்கான விண்ணப்பதாரர்கள், ஒரு **பட்டதாரியாகவும் அல்லது பட்டப்படிப்பை மேற்கொள்பவர்களாகவும் மற்றும் ஆங்கில மொழியில் புலமை பெற்றவர்களாகவும்** (உயர்நிலை பள்ளி அளவில் ஆங்கிலம் பயின்றவராகவும் அல்லது இளங்கலை பட்டப் படிப்பில் ஆங்கில மொழியை இடைநிலை மொழியாக பயின்றவராக) இருக்க வேண்டும். மேலும் இவர்கள் இதற்கு முன்பு, இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்த **'இந்தியாவை அறிவோம் திட்டம்' (KIP) நிகழ்விலோ அல்லது 'புலம்பெயர்ந்த இளைஞர் வேலை வாய்ப்பு திட்டத்திலோ' (IPDY) அல்லது இந்தியாவைப் பற்றி கற்கும் திட்டம் (SIP) பங்கேற்றிருந்திருக்கக் கூடாது.** மேலும், **<u>இதுவரை இந்தியாவிற்குப் பயணம் மேற்கொள்ளாதவர்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்</u>**. விண்ணப்பதாரர்கள் தாங்கள் ஒரு இந்திய வம்சாவளியினர் என்று ஆதாரத்தைக் காட்ட தங்களுடைய பெற்றோர்கள்/தாத்தா பாட்டியின் வெளிநாட்டு இந்தியக் குடியுரிமை அட்டை **(OCI)** அல்லது இந்திய வம்சாவளி நபர் அட்டையை **(PIO)** சமர்ப்பிக்க வேண்டும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்கள், இந்தியாவில் பயணம் செய்யும் காலம் வரை, ஒரு **வெளிநாட்டு மருத்துவக் காப்பீட்டை (overseas medical insurance)** எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், **10% விமான டிக்கெட்டின் கட்டணத்தை** இந்திய தூதரகத்தில் செலுத்த வேண்டும். அதுமட்டுமில்லாமல், இத்திட்டத்தை முழுமையாக முடிக்காத விண்ணப்பதாரர்கள், இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் விமான சீட்டின் கட்டணத்தை முழுவதும் **திரும்ப செலுத்துவதாக ஒரு உறுதிமொழி சான்றிதழை கையொப்பமிட்டு இந்தியத் தூதரகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதன்பிறகே அவர்களுக்கு இலவச விசாவும் விமான சீட்டும் வழங்கப்படும்.**

7. தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்களுக்குப் பின்வரும் வசதிகள் இந்தியாவில் வழங்கப்படும்.

I ) உள்ளூர் விருந்தோம்பல் : குறைந்த கட்டணதில் அரசு விருந்தினர் இல்லங்களில் தங்குமிடம் / உணவு வசதி (பட்ஜெட் விடுதி)

II) நிகழ்ச்சி திட்டத்தின்படி உள்நாட்டு பயணம்.

III) ஒவ்வொரு நாளும் கொடுப்பனவு (Allowance) கொடுக்கப்படும்.

IV) கோலாலம்பூர் இந்திய தூதரகம் வழங்கும் இலவச விசா வழங்கப்படும்.

V) மலேசியாவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பிச் செல்ல விமான சீட்டு

8. இத்திட்டத்திற்கான விண்ணப்பத்தை www.kip.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்திற்கான ***இறுதிநாள் ஜூலை 21, 2017.*** தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர் பட்டியல் ஜூலை 31, 2017ஆம் தேதி அறிவிக்கப்படும்.

******